Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி -27 | 14-10-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 238

கிளிநொச்சியில் கணினி மையம் TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
யாழ். சாலை, கிளிநொச்சி.


# அம்பாறை திராய்க் கேணியில் மனிதப் புதைகுழி; எலும்புக்கூடுகள், மண்டைஓடுகள் மீட்பு!

## சிரமதானப்பணியின்போது கண்டுபிடிப்பு

(அம்பாறை)

**அம்பாறை மாவட்டம் திராய்க் கேணி தமிழர் கிராமத்தில் புதை குழியொன்றிலிருந்து மனித எலும்புக்கூடுகள் மண்டையோடுகள், ஆடைகள் என்பனவற்றை அப்பிரதேச மக்கள் கண்டெடுத்துள்ளனர். கிராமத்தைத் துப்புரவு செய்யும் நோக்கில் இந்து ஆலயம் ஒன்றுக்கண்மையில் சிரமதானப் பணியில் ஈடுபட்ட மக்களே இந்தப் புதைகுழியினைக் கண்டுபிடித்துள்ளனர்.**

கிராம முக்கியஸ்தர்கள், விடுதலைப்புலிகள் ஆகியோர் நேற்றுமுன்தினம்இந்தப் புதை குழிகளைத்தோண்டியபோது ஏழுக்கு மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து மேலும் அங்கு தேடுதல் நடவடிக்கைமேற்கொள்ள சட்டத்தரணிகள் ஊடாகஅப்பகுதி மக்கள் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்கள். அட்டாளைச்சேனைப் பிரதேசசபைப்பிரிவிலுள்ள திராய்க் கேணி கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலை நடவடிக்கையில் 58 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் சிதைவுகளே இவ்வெலும்புக்கூடுகள் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



திராய்க் கேணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள்

## புலிகள் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை சமர்ப்பிக்க முன்வந்தமை முக்கியமான விடயம்

### - சிறிலங்காப் பிரதமர் ரணில்

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விபரங்கள் அடங்கிய திட்டக்கோவை ஒன்றை சமர்ப்பிக்க விடுதலைப்புலிகள் முன்வந்துள்ளமை முக்கிய விடயமாகும் என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முடிவடைந்த இந்து சமுத்திர வலய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் ஆறாவது மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது பற்றியும் பிரதமர் தமது உரையில் விளக்கிய போது,

1987ஆம் ஆண்டு சிறிலங்கா-இந்திய ஒப்பந்தத்தின் போது சர்வதேச தலையீட்டிற்கு ஆதரவு தெரிவித்தவர்களில் சனாதிபதியும் நானும் இருந்தோம் என்றார்.

மேலும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேச நாடுகளின் தலையீடு அதிகரித்து வருகின்றன என்ற குற்றச் சாட்டை மறுத்துள்ளார். நமது நாட்டின் சமாதானப் பேச்சுக்களின் தலையீட்டுக்கு பிரதமர் வழியேற்படுத்தி வருவதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிஹல உறுமயவின் ஊர்வலம் குறித்து க.கா.குழு அலுவலகத்தில் ஆராய்வு

(திருகோணமலை)

குரங்குபாஞ்சான் முகாம் நோக்கி சிஹலஉறுமய நடத்தஇருக்கும் ஊர்வலம் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரி, அரசாங்க அதிபர், கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர்ஆலோசனைக் கூட்டம்ஒன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

திருமலை மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், அரசாங்க அதிபர், கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இருந்தும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. (25)

## இராணுவப்பாதுகாப்புடன் வந்தவர் வயோதிபரை வாளால் வெட்டினார்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டியில் நேற்று முன்தினம் ஆலயத்திற்குள் வழிபட்டுக் கொண்டிருந்த வயோதிபர் ஒருவரை இராணுவப்பாதுகாப்புடன் வந்த நபர் வாளால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

த.சிவஞானம் (வயது73) என்ற வயோதிபரே காயப்படுத்தப்பட்டுள்ளார். காயத்துடன் கிடந்த இவரை பொதுமக்கள் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் வடமராட்சி புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனிடையே குறித்த குடும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் உயர்மட்டக் குழுவும் கொழும்பு வருகிறது!

(லண்டன்)

இன்று கொழும்பிற்குவரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்காவுடன் உயர்மட்டக்குழு ஒன்றும் வருகிறது.

கொழும்பில் நடக்கவிருக்கும் இந்திய-இலங்கை கூட்டு ஆணையகத்தின் 5ஆவது கூட்டத்தில் பங்கேற்கவரும் இக்குழுவினர் இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தக, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்து சிறிலங்கா அதிகாரிகளுடன் விரிவாக ஆராயவுள்ளனர்.

சிங்கா தலைமையிலான உயர் மட்டக் குழுவில் கடல் வளர்ச்சித்துறை, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சாரத் துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகள் உள்ளடங்கியுள்ளதால் இத்துறைகளில் இருநாடுகளுக்குமிடையில்முக்கியஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம்.

மேலும் 2000ஆம் ஆண்டு 100 மி.அமெரிக்க டொலர் பணத்தை சிறிலங்காவிற்கு நீண்டகாலக் கடனாகத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பதவி நீடிப்பை ஏற்க பொலிஸ்மா அதிபர் மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தமது சேவை நீடிப்பை ஏற்க மறுத்துள்ளார்.

அவரது பதவிக்காலத்தை மேலும் ஒருவருடத்திற்கு நீடிக்குமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க செய்திருந்த சிபார்சிற்கு அமைய அவருக்கு சனாதிபதியால் பதவி நீடிப்பு வழங்கப்பட்டது. இதற்கு சிஹல உறுமய உட்பட பலர் எதிர்ப்புத் தெரிவித்துக் குற்றச்சாட்டுக்களை தெரிவித்திருந்த நிலையில் பொலிஸ்மா அதிபர் தமது பதவி நீடிப்பை ஏற்கமறுத்துள்ளார்.

இதேவேளை போதைவஸ்துக் கடத்தல் காரருடன் தொடர்பு வைத்துள்ள பொலிஸ்மா அதிபரை வீட்டுக்கு அனுப்புமாறு கொழும்பு நகரில் சிஹல உறுமய சுவரொட்டியை ஒட்டியுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்து தற்போது சிஹல உறுமய கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருக்கும் கொட்டகதெனிய பொலிஸ்மா அதிபர் பதவி தமக்கே வழங்கப்பட்டிருக்கவேண்டும்எனமுன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசிற்கு எதிரான மக்கள் சக்தியை எதிர்க்கட்சித்தலைவர் காட்டப்போகின்றாராம்

### கொழும்பில் லட்சக்கணக்கில் மக்களைத்திரட்டத்திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் 24ஆம் திகதி லட்சக்கணக்கான மக்களை கொழும்புக்கு அழைத்துவந்து அரசாங்கத்துக்கெதிரான மக்கள் சக்தியைக் காட்டப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தைப் பதவியிலிருந்து நீக்கி சனாதிபதிக்கு மக்களாதரவை பெற்றுக்கொடுப்பதற்காக இவ்வாறு செய்வதாக அவர் தெரிவித்துள்ளார். கேகாலை நகரில் நேற்று நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றில் உரையாற்றும்போது எதிர்க்கட்சித் தலைவர் மேற்படி கருத்துக்களைக் கூறியுள்ளார்.

சனாதிபதி வழங்கிய சமுர்த்தி நலன்களை தற்போதைய அரசு நிறுத்தியதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏறியவுடன் அவை மீண்டும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### வீதிஒழுங்கு நூல்

ஓட்டுநர் அனுமதி பெறுவதற்கு வீதி ஒழுங்கு நூல் 45/- சகல ஈழத்து வெளியீடுகளும் இந்திய அறிவியல் நூல்கள், குழந்தைகளுக்கான நூல்கள், தேவநேயப்பாலவணின் நூல்கள் அறிவமுது பொத்தகசாலை, கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம். (3841)

### அமல் பல் மூக்குக் கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து தகுந்த பார்வைக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல் பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல், போன்றன உடன் செய்து கொடுகப்படும். தொடர்புக்கு:- பரந்தன்வீதி, புதுக்குடியிருப்பு. (3713)

### MD-90 விற்பனைக்குண்டு

பாவித்த MD-90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. விலை 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவை. தொடர்பு: அறிவமுது பொத்தகசாலை, கிளிநொச்சி. (3844)


# பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனக் கண்காட்சி பயிற்சி நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்) பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நிறைவு விழாவும், கண்காட்சி வைபவமும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று பகல் 10.15 மணிக்கு பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவி திருமதி செல்வராணி தலைமையில் நடைபெற்றது.

நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கிளி.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். நிறுவனக் கொடியினை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏற்றிவைக்க, பயிற்சி நிலையக் கொடியினை பயிற்சி நிறுவன இயக்குனர் விஜிதா ஏற்றிவைத்தார். அடுத்து மங்கல விளக்கினை எழுத்தாளர் திருமதி ஆதிலட்சுமி, கிளி. மாவட்ட விவசாய திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி. ஆனந்தராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து கணினிப்பயிற்சி நிலையத்தினை கிளி.வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களும், தட்டச்சு நிலையத்தினை கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் அவர்களும், கண்காட்சியினை டென்மார்க்கைச் சேர்ந்த சுதர்சினியும் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தனர். வரவேற்புரையினை ஜெகன் நிகழ்த்தினார். தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. சிறப்புரையினையடுத்து பயிற்சியினை முன்னுரிமையில் நிறைவு செய்தவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் மற்றையோர்க்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



# பொலிஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் மரணம்

பொரளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திடீரென்று உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் உயிரிழப்பதற்கு முதல் நாள் சனிக்கிழமை மாலை இந்த நபர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

பொரளை சரணமாலஹிம் மாவத்தையைச் சேர்ந்த ஆர்.எம்.ஜயரத்ன (வயது-45) என்பவரே மரணமடைந்தவராவார்.

போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இவர், விசாரணையின் பின்னர் அடைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே மரணமானதாகப் பொரளைப் பொலிசார் கூறியுள்ளார்கள்.

இதற்கு முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் தூக்கப்பட்டு மரணமான சம்பவமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.


## 04ஆம் ஆண்டு நினைவலைகள்...



மண்ணில் முத்தாக * 09 * 04 * 1976

மண்ணில் வித்தாக * 14 * 10 * 1999

### மேஜர் இளம்பிறை

நாகேந்திரம் ஜெயகலா
கைதடி வடக்கு, யாழ்.
சம்பவம்- அம்பகாமம் பகுதியில் சிறாலுவத்துடனான நேரடி மோதலின் போது...

எம் இனிய மகளே!
உன் பிரிவால் துயருற்றாலும்
தேசத்திற்காய் மறைந்தாய்
என்பதால் பெருமையடைகின்றோம்.
உனை என்றும் மறவா உறவுகள்...!

அன்னாசிலையடி,
அந்தோனியார் கோவில் முன்பாக,
அக்கராயன்.

குடும்பத்தினர்.

(சி-8652)

## நான்காம் ஆண்டு நினைவுநாள்



ஓவிய மானது 14 □ 11 □ 1981

வீரகாவிய மானது 14 □ 10 □ 1999

### கடற்கரும்புலி மேஜர் பரணி(கோபி)

சூரியயோகானந்தம் அமர்நாத் [அபிரன்]

கடலிற் கரைந்து காவியமாகினாய்
கனிவான உன்முகம் கனவிலும் வருகுதே
தரணிக்கு உரமான பரணியே தம்பி
மரணமும்உன்முன் மண்டியிட்டதையா

வீரமாணிக்கதேவன் துறை, நாவலடி ஒழுங்கை, மயிலிட்டியைச் சொந்த முகவரியாகவும், வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடகைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட, கடற்கரும்புலி மேஜர் பரணி(கோபி) புல்மோட்டைக் கடற்பரப்பில் வீரகாவியமான நான்காம் ஆண்டு நினைவு நாளை 15.10.2003 (புதன்கிழமை) நாளை நினைவு கூரவுள்ள வேளை, சகல போராளிகளையும் உற்றார் உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(3842)

தகவல்:-பெற்றோர்.


## அத்தியாவசிய சேவைகள் கூட்டம்

கிளி.மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் இன்று பகல் 10.00 மணிக்கு கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் கிளி.மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.மேற்படி கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவன மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளார்.மாதத்தில் வரும் இரண்டாவது செவ்வாய்க் கிழமைகளில் அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (சோ)

## மாளிகாவத்தையில் ஒருவர் பலி

கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியில் வந்த இருவரே பிரஸ்தாப நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

இதேவேளை கொழும்பு-கிறாண்ட்பாஸ் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் மூவர்காயமடைந்துள்ளதாகவும் சிறிலங்காப் பொலீசார் தெரிவித்துள்ளனர்.

## பாம்பு கடித்த ஒருவர் மரணம்

பாம்புக்கடிக்கு இலக்கான நபர் ஒருவர் சிகிச்சைக்கென எடுத்துவரப்படும் வழியில் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு ஐயன்குளம் பகுதியில் வைத்து பாம்பினால் கடியுண்ட மேற்படி நபர் சிகிச்சையின் பொருட்டு மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சையினைப் பெறும்பொருட்டு கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படும் வழியில் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

புத்துவெட்டுவான் ஐயன்குளத்தைச் சேர்ந்த இ.சாந்தகுமார் (வயது-35) என்ற நபரே மரணமானவர் ஆவார். (சோ)


## நினைவுகளில் நனைகின்றோம்



தாயின் மடியில் 04 - 10 - 1975

தாயக மண்ணில் 14 - 10 - 1999

### லெப்டினன்ட் குட்டிமணி

(சண்முகராஜா அருமருநிதன்)

காவியத்தின் நாயகனே!
கனவுகளை நனவாக்கி
கல்லறையில் உறங்குகின்றாய்!
ஆனாலும் உன் நினைவுகள்
எம்மிதயங்களில்
அழியா ஓவியங்கள்!

சிவநகர்,
உருத்திரபுரம்.

குடும்பத்தினர்

(3846)

## சாவு அறிவித்தல்

### அமரர் இராசையா யோகேஸ்வரன்

புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட இராசையா-யோகேஸ்வரன் இளைப்பாறிய புதுக்குடியிருப்புத் தபால் அதிபர் அவர்கள் 2003-10-11 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராசையா (ஓவசியர்)-அன்னலட்சுமியின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற வல்லிபுரம்பிள்ளை-சின்னாச்சிபிள்ளையின் அன்பு மருமகனும், விசாகம்மா(இளைப்பாறிய ஆசிரியயை) வின் அன்புக் கணவரும், தேவராசா(சுவிஸ்), திருமகள்(ஆசிரியை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்), கலைமகள்(கனடா), அமரர் ஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன் (முத்துஐயன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை அதிபர்), கோடீஸ்வரன் (கனடா), மகேஸ்வரி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-10-2003 (புதன் கிழமை) நாளை 1:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காகப் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:-
ந.கருணாகரன் (மருமகன்)
(முத்துஐயன்கட்டு இடதுகரை
அ.த.க.பாடசாலை அதிபர்)

(சி-7793)

# தலையொட்டிய இரட்டைக் குழந்தைகள் 26 மணிநேர அறுவைச் சிகிச்சையில் பிரிப்பு

எகிப்து நாட்டின் தலைகள் ஒட்டிப் பிறந்த இரண்டு வயதான இரட்டைக் குழந்தைகள் (அகமட்-மொஹமட்) அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து அவ்வளவாக இல்லையென்கிற போதிலும் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளனர்.



சத்திரசிகிச்சைக்கு முன்பு....

அமெரிக்காவிலுள்ள பெலாஸ் குழந்தைகள் மையத்திலேயே இந்தக் குழந்தைகளைப் பிரிப்பதற்கான அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ளது. மிகவும் சிக்கலான இந்த அறுவைச் சிகிச்சையை நரம்பியல் நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பிரிவு நிபுணர்கள் ஊர் 26மணிநேர அறுவைச் சிகிச்சை மூலம் அக்குழந்தைகளை வெற்றிகரமாகப் பிரித்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இரவு 11.00 மணிக்கு அறுவைச் சிகிச்சை முடிவடைந்துள்ளது.

குழந்தைகளின் மூளைப் பகுதியிலுள்ள ரத்த நாளங்கள் தனித்தனியாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அடுத்தகட்டமாகப் பிரிக்கப்பட்ட குழந்தைகளின் மண்டையோடு களைத் திருத்தியமைக்கும் பணி மேற்கொள் ளப்பட்டது. இதற்கு எட்டு மணிநேரம் செலவிடப் பட்டது.

அறுவைச் சிகிச்சையின் போது குழந்தைகள் இரண்டும் உயிர் பிழைப்பது அரிது என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அன்னை திரேசாவுக்கு முக்திப்பேறு பட்டம் வழங்க வத்திக்கான் முடிவு

இந்தியாவின் கொல்கொத்தா நகரில் ஆதரவற்றோருக்கு அபயம் அளிக்கும் வகையில் கருணை இல்லம் ஒன்றை ஆரம்பித்து அதனை உலகின் பல பாகங்களுக்கு விஸ்தரித்த அன்னை திரேசாவுக்கு முக்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கப் படவுள்ளது.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரால் இந்தப் பட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வழங் கப்படவுள்ளதாகத் தெரிவிக் சப்படுகிறது.

பொதுவாக ஆன்மீக வாழ்க்கையிலும் பொதுப் பணிகளிலும் ஈடுபடும் ஒருவர் இறந்த பின்னர் பல்லாண்டு காலங்களின் பின்னரே முக்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கப்படுகின்ற போதிலும் அன்னை திரேசா உயிர் நீத்து ஆறு வருடங்களில் அவருக்கு இந்தப் பட்டம் வழங் கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, புனித பாப்பரசர் பதவியின் வெள்ளி விழாவைக் கொண்டாடவுள்ள இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது பதவிக் காலத்தில் இதுவரை 477 பேரைப் புனிதர்களாகத் திருநிலைப்படுத் தியுள்ளதுடன் 1318 பேரை முக்திப் பேறு பெற்றுள்ளவர்களாகப் பெயரிட் டுள்ளார்.

# உள்ளாட்சி இடைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு கணிசமான வெற்றி

தமிழகத்தின் உள்ளாட்சி இடைத்தேர்தல்களில் தி.மு.க கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளது. மதுக்கரை,பெரம்பலூர் பேரூராட்சி தலைவர் பதவிக்கான தேர்தலில் அ.தி.மு.க வேட்பாளரைவிட தி.மு.க ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதேவேளை கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் 85 வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க வெற்றியீட்டியது.

மாநகராட்சி வட்டார சபைக்கான தேர்தலில் தி.மு.கவுக்கு திருச்சியிலும், அ.தி.மு.க.வுக்கு மதுரையிலும் தலா ஒரு இடம் கிடைத்துள்ளது.

# மனநல மருத்துவமனையில் தீ; 30 நோயாளர் உயிரிழப்பு!

பெலாரஸ் நாட்டில் மனநல மருத்துவமனை ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 30 நோயாளிகள் உயிரிழந்துள்ளார்கள்.

சோவியத் கூட்டமைப்பு நாடுகளிலொன்றான பெலாரஸில் கோட்ஸவெஸ்ட் நகரில் அமைந்துள்ள மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஒரு மனநோயாளி திடீரென ஏற்பட்ட ஆவேசத் தினால் மருத்துவமனைக் கட்டடத்திற்குத் தீ வைத்துவிட்டார். இந்தத் தீ வேகமாகப் பரவியதால் அங்கு சிகிச்சை பெற்று வந்த அனேகர் தீயில் சிக்கிக் கொண்டனர்.

நோயாளிகள் அனைவருமே தீ பரவுவதை உணராது மயக்க நிலையில் இருந்தமையினால் தான் 30 பேர் உடல் கருகிமரண மடைய நேரிட்டதாகக் கூறப் பட்டுள்ளது.



இந்தோனேசியா-பாலி குண்டுவெடிப்பில் பலியான தமது உறவினரின் நினைவாக மலர் அஞ்சலி செய்யும் சிறுமி.



அமெரிக்க 720ஆவது ராணுவ பொலிஸ் படையின் தேடுதல் நடவடிக்கைக்கு மத்தியில் அமைதியாக அமர்ந்திருக்கும் ஈராக்கியர்

# சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோவில் வலியுறுத்தி விஸ்வஹிந்து பரிஷத் பேரணி!

## உத்தரப் பிரதேசத்தில் பதட்டம் அதிகரிப்பு

(புதுடில்லி)

**அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்டப் பட வேண்டும் என்பதை வலியுறுத்தி விஸ்வஹிந்து பரிஷத் மிகப் பெரியளவில் பேரணி ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.**

இந்தப் பேரணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்றும் விஸ்வஹிந்து பரிஷத் கூறியுள்ளதையடுத்து,

அயோத்தி,ஹைதராபாத் ஆகிய இடங்களில் அனைத்துப் போக்குவரத்துப் பாதைகளையும் உத்தரப் பிரதேச மாநில அரசு மூடிவிட்டது.

இதனால் அயோத்திக்கு வரும் புகையிரதங்கள் அனைத்தும் வேறு பாதையில் திருப்பி விடப்படுவதாகவும், பேருந்துப் போக்குவரத்துக்கள் அனைத்துமே முற்று முழுதாக நிறுத்தி விட்டதாகவும் ஹைதராபாத் பிரிவு ஆணையர் ஜே.பி.சர்மா கூறியுள்ளார்.

இதனிடையே தடையை மீறி அயோத்தி நகருக்குள் நுழைய முயன்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட விஸ்வஹிந்து பரிஷத் தொண்டர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனால் அங்கு நிலைமைகள் பரபரப்பு அடைந்துள்ளன. இதனையடுத்து மத்தியரசின் துணை இராணுவப் படைகளின் 12 பிரிவுகள் உத்தரப் பிரதேசத்திற்கு வரவுள்ளதாக,உத்தரப் பிரதேசத் தலைமைச் செயலர் அகல் பிரதாப் சிங் லக்னோவில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# தலிபான்களின் கெரில்லாத் தாக்குதலில் இரு மாதங்களில் 300 படையினர் பலி!

## -சிறையிலிருந்து 30 தலிபான்கள் தப்பியோட்டம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் சிறையிலிருந்து 30 கைதிகள் தப்பியோடி விட்டனர். கந்தகாரின் புறநகரில் அமைந்துள்ள சிறையில் 60 ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 30 கைதிகள் கடந்த சனிக்கிழமை தப்பியோடி விட்டார்கள். இதனைச் சிறையதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தப்பியோடியவர்கள் அனைவருமே தலிபான்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஒழிந்துள்ள தலிபான்கள், கர்சாய் அரசின் வீரர்கள் மீதும்,சர்வதேச அமைதிப்படையினர் மீதும் அடிக்கடி கெரில்லாத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் இத்தகைய தாக்குதலில் 300 ற்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளார்கள்.

# இந்தியா - சீனா எல்லைப் பிரச்சினை இருதரப்பும் கூடி ஆராயத் தீர்மானம்

எல்லைப் பிரச்சினை பற்றி ஆராய சீன, இந்தியச் சிறப்புப் பிரதிநிதிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி சந்திக்கவுள்ளதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

இந்தியாவும், சீனாவும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ஆய்வுக் கூட்டுக் குழு அமைப்பதை விரைவு படுத்த ஒப்புக் கொண்டுள்ளன.

தாய்லாந்தில் சியாங்மாய் நகரில் புதுடில்லி புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இந்தியா, ஆசியான் உச்சி மாநாட்டின் போது சீனப் பிரதமருடன் பேச்சுக்களை நடத்திய போது இந்த உடன்பாடு ஏற்பட்டதாகவும், இருதரப்பு பொருளாதார உறவுகளின் முன்னேற்றம் குறித்து விவாதித்ததாகவும் வாஜ்பாய் கூறியுள்ளார்.

எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்திய சீனச் சிறப்பு பிரதிநிதிகள் முதன் முறையாக இம்மாதம் 23 ஆம் திகதி சந்தித்துப் பேசுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# வாரத்தில் இரு நாட்கள் வைகோ நீதிமன்றில் ஆஜர்

(சென்னை)

பொடோ வழக்கில் கைது செய்யப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொது செயலாளர் வைகோ உட்பட 09 பேரும் நேற்று பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்களது விசாரணை நேற்று நடைபெற்றது. பொடோ வழக்கு விசாரணைகள் விரைவில் முடிவடைவதற்காக வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் எடுத்தமை தெரிந்ததே. இதனையடுத்தே நேற்று வைகோ உள்ளிட்ட 09 பேரின் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.




# கை நழுவிப்போன வெற்றி வாய்ப்பு

இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கிடையில் அகமதாபாத்தில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி உப்பு சப்பற்ற முடிவுடன் நிறைவடைந்துள்ளது.



இதன் மூலம் நியூசிலாந்து அணி இந்திய மண்ணில் எதிர்கொள்ள இருந்த சவாலை முதலாவது போட்டியில் வெற்றிகரமாக முறியடித்துள்ளது.

எதிர்பார்த்ததைப் போன்று பரபரப்பாக ஆரம்பமான இப்போட்டித் தொடரின் முதல் போட்டியில்தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய போதும் நியூசிலாந்து வீரர்களின் விக்கெட்டுக்களைப் பறிப்பதில் தோல்வி கண்டது.

முதல் இனிங்சில் ஐந்து விக்கெட்டுக்கு 500 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்ட இந்தியா 41 ஓட்டங்களுக்கு நியூசிலாந்தின் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சாதகமான நிலையை ஏற்படுத்தியபோதும் மூன்றாம் நாள் ஆட்டத்தில் மேலும் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தி நியூசிலாந்து அணியை அதன் இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்து ஆடவேண்டிய நிலைமை உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நியூசிலாந்து அணி 8ஆவது விக்கெட்ஜோடி சிறப்பாக ஆடி அந்நிலையை மாற்றியதுடன் முதல் இனிங்சிற்காக 340 ஓட்டங்களையும் குவித்தது. இதனால் தனது முயற்சியில் தோல்வி அடைந்த இந்திய அணித் தலைவர் கங்குலி இரண்டாவது இனிங்சிற்காக 209 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தி நியூசிலாந்து அணி வெற்றிபெற 370 என்ற ஓட்ட இலக்கை நிர்ணயித்தார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டநேர முடிவின் போது ஒரு விக்கெட்டை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து இறுதி நாளான ஐந்தாம் நாள் நியூசிலாந்து மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தபோதும் ஏழாவது விக்கெட் ஜோடியாக இணைந்த மைக்கிலனும், நாதன் அஸ்லேயும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஆனால் வெற்றிக்கான எண்ணிக்கையைப் பெறமுடியவில்லை.

இப் போட்டியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங், நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் பிரகாசிக்கத் தவறினர்.


இதன் மூலம் வெற்றி தோல்வியை தீர்மானிப்பவர்களாக இவர்கள் இருப்பார்கள் என்ற எதிர்வு கூறல் பொய்த்துப் போனது.

அது எவ்வாறிருப்பினும் பிளெமிங் நடைபெற்று முடிந்த போட்டியில் வெற்றிபெற்று விட்டார் என்றே கூறவேண்டும். ஏனெனில் சச்சினை வீழ்த்துவதில் வெற்றிகண்டமையே.

இதன் மூலம் நியூசிலாந்து அணி இந்திய மண்ணில் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்வதற்குப் பழக்கப்பட்டுவிட்டதென்பது உறுதியாகியுள்ளது.

தற்போது ஏழாவது முறையாக இந்திய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து ஆறுமுறை இந்திய அணியிடம் தோல்வி அடைந்ததுடன் 1969-70 இல் நடைபெற்ற போட்டியில் மாத்திரம் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வென்று சமன் செய்துள்ளன.

இந்நிலையில் இந்திய மண்ணில் இதுவரை தொடரைக் கைப்பற்றாத நியூசிலாந்து அணிக்கு இப்போட்டித் தொடர் சாதகமான நிலையை ஏற்படுத்துமா?



# சாதனை வீரர்

அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் சிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவருமான மத்யூ ஹெய்டன் துடுப்பாட்டத்தில் 380 ஓட்டங்களைப் பெற்று புதிய உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

சிம்பாவ்வே அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போதே அவர் இச் சாதனையைப் படைத்துள்ளார்.

இதுவரைகாலமும் மேற்கிந்தியத்தீவுஅணியின் கப்டன் பிறைன் லாறா 375 ஓட்டங்களைப் பெற்று இச்சாதனைக்குரியவராகத் திகழ்ந்தார்.

1994ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக சென்.ஜோன்ஸில் நடைபெற்ற போட்டியில் பிறைன் லாறா இச்சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.



ஒன்பது வருடங்களின் பின்னர் இச்சாதனையை மத்யூஹெய்டன் முறியடித்துள்ளார்.

சிம்பாவ்வே அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்திலேயே இச்சாதனை அவரை சென்றடைந்தது.

அன்று மாலை தேநீர் இடைவேளையின் போது 376 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காது இருந்த ஹெய்டன் 400 ஓட்டங்களைப் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் மீண்டும் ஆட்டம் ஆரம்பமானவுடன் முதலாவது ஓவரிலேயே ஆட்டமிழந்தார். அப்போது அவர் 380 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இந்தப் புதிய சாதனையை நிலை நாட்டுவதற்கு மத்யூ. ஹெய்டன் ஆடுகளத்தில் 622 நிமிடங்கள் நிலைத்து நின்றதுடன் 437 பந்துகளை சந் தித்து 38 நான்கு ஓட்டங்களையும், 11ஆறு ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

இதுவரை 45 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஹெய்டன் 15 சதங்களைப் பெற்றுள்ளதுடன் இரட்டைச் சதம் ஒன்றையும் பெற்றிருந்தார். அத்துடன் கடந்த 12 போட்டிகளில் 6சதம் அடித்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய சாதனையை இவர் நிலைநாட்டிய போது அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கப்டன் மார்க் டெய்லர், மற்றும் டொன் பிரட்மன் ஆகியோரின் 334ஓட்டங்கள் என்ற அவுஸ்திரேலியாவின் தனி நபரொருவருக்கான சாதனையையும் முறியடித்தார்.

இதுவரை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு இனிங்சில் 17 வீரர்கள் 3300 ஓட்டங்களைத் தாண்டியுள்ளனர். இதில் சிறிலங்கா அணியின் சனத் ஜெயசூரிய 340 ஓட்டங்களைப் பெற்று ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

இம் மாதம் 29ஆம் திகதி தனது 32 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் ஹெய்டன் குயின்ஸ்லாந்து மாநிலத்தின் கிங்காரோ நகரில் பிறந்தவர். அவரின் அண்ணன் கெரி தான் ஹெய்டனின் இளமைக்கால பயிற்றுநர்.

பிரிஸ்பேன் பல்கலைக்கழகத் தில் உயர் கல்வி கற்ற ஹெய்டன் 1991ஆம் ஆண்டில் முதல் தரப் போட்டிகளில் கலந்துகொண்டதுடன் 1993ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான போட்டிமூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட் டிக்கு அறிமுகமானார். அவ்வருட இங்கிலாந்து சுற்றுலாவில் ஹெய்டன் 1000 ஓட்டங்களைக் குவித்தார். ஆனால் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு எளிதில் கிட்டாத ஹெய்டன் அடுத்த ஆறு வருடங்களில் 7டெஸ்ட் போட்டி களில் மாத்திரமே பங்குபற்றினார்.

பின்னர் 2000 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான போட்டி மூலம் அவருக்கு மீண்டும் டெஸ்ட் வாய்ப்புக் கிடைத்தது.

இதுவரை 44 டெஸ்ட் போட்டிக ளில் 74 இனிங்சுகளில் துடுப்பெடுத்தாடி 3,536 ஓட்டங்களைப் பெற்றுள்ள ஹெய்டன் 59.44 என்ற ஓட்ட சராசரியைப் பெற்றுள்ளார்.

# புள்ளிகளும் தரவரிசையும்

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்தியா 94 புள்ளிகளுடன் தற்போது ஐந்தாவது இடத்தில் உள்ளது. நியூசிலாந்து அணி 106 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான தொடரை வைத்துக்கொண்டு இரு அணிகளும் ஐ.சி.சி. டெஸ்ட் தரப்பட்டியலில் எந்த இடத்தைப் பிடிக்கும் எனத் தெரியவரும். தற்போது அவுஸ்திரேலிய அணி 129 புள்ளிகளுடனும், தென்னாபிரிக்கா 116 புள்ளிகளுடனும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பிடித்துள்ளன.

இந்தத் தொடரின் வெற்றி மூலம் இந்தியா, நியூசிலாந்து அணிகள் முதல் இடத்தைப் பிடிக்க வாய்ப்புக்கள் இல்லை என்றாலும் தற்போது கிடைத்துள்ள இடத்தை தக்கவைத்துக்கொள்ள வாவது இந்தத் தொடரைக் கைப்பற்ற போராட வேண்டியிருக்கும்.

இந்தத் தொடரின் மூலம் இந்த இரு அணிகளும் பெறப்போகும் புள்ளிகள் மற்றும் ஐ.சி.சி. தரவரிசையில் கிடைக்கும் இடங்களின் விபரம்.

தொடரை இந்திய அணி கைப்பற்றினால் மேலும் 6 புள்ளிகளைபெற்று மொத்தம் 100 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தைப் பிடிக்கும். அப்போது நியூசிலாந்து அணி 98 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திற்கு வந்துவிடும். 4ஆவது இடத்தில் உள்ள இங்கிலாந்து 104 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திற்கு முன்னேறிவிடும்.

மாறாக நியூசிலாந்து அணி இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றால், இந்திய அணி 90 புள்ளிகளைப்பெற்று பட்டியலில் பின்தங்கிவிடும். நியூசிலாந்து 111 புள்ளிகளைப்பெற்று தனது நிலையைத் தக்கவைத்துக்கொள்ளும்.

இந்திய அணி ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றிபெற்று மற்றைய போட்டியை சமன்செய்தால் 98 புள்ளிகள் கிடைக்கும். அப்போது நியூசிலாந்து 100 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திற்கு வரும்.

மாறாக நியூசிலாந்து ஒரு போட்டியில் வெற்றிபெற்று ஒரு போட்டியை சமன்செய்தால் 108 புள்ளிகளைப்பெறும். இந்தியா 92 புள்ளிகளை மாத்திரம் பெறும். இரு அணிகளும் சமனில் முடித்துக்கொண்டால் இந்திய அணி 95 புள்ளிகளைப் பெறும் அதேவேளை நியூசிலாந்து 104 புள்ளிகளைப் பெறும்.

# வாரம் ஒரு நட்சத்திரம்...


## பெரன்ஸ் புஸ்கஸ் - ஹங்கேரி

1950 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய உதைபந்தாட்ட களத்தின் முன்வரிசையில் நின்ற ஹங்கேரி அணியின் நட்சத்திரமாக திகழ்ந்த புஸ்கஸ் 1954 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப்போட்டியின் போது தென்கொரியாவுக்கு எதிராக 9-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்று அட்டகாசமாக அன்றைய உலகக் கிண்ணப் போட்டியை ஆரம்பித்து வைத்தது ஹங்கேரி.

ஆனால் இறுதிப் போட்டிகளில் தன் முழுத்திறமையையும் காட்டி விளையாட முடியாமல் புஸ்கஸ் காயப்பட்டார்.இருந்தும் இறுதிப் போட்டியில் மேற்கு ஜேர்மனிக்கு எதிரான ஆட்டத்தில் ஹங்கேரி தோல்வியைத் தழுவினாலும் 2-3 என்ற கோல் எண்ணிக்கையில் ஜேர்மனிக்கு எதிரான முதலாவது கோலைப் போட்டவர் தான் புஸ்கஸ்.

# அடிப்படை வசதிகளுக்காய் ஏங்கும் கௌதாரிமுனை கிராமம்...!

பூநகரி கௌதாரி முனை கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறியுள்ள நிலையில் அவர்களின் அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படாத நிலையே



இன்று வரையுள்ளது. இதனால் இங்குள்ள மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

கௌதாரிமுனை கிராமத் தில் வசிக்கின்ற மக்கள் தமது கிராமத்திற்கு செல்லும் சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் உள்ள வீதியில் பயணிப்பதற்கு தினமும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின் றனர். இந்த வீதியின் சீர்கேடு இக் கிராமத்தின் சகல நடவடிக்கைகளையும் பாதித்துள்ளதாக அங்குள்ள மக்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

வாடியடிச்சந்தியிலிருந்து சுமார் 15 கி.மீ தூரத்தில் உள்ளது இக்கிராமம். இவ்வீதியின் முக்கால் பங்கு தூரம் மண்ணினால் முற்றாக மூடப்பட்டு குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதியூடாக துவிச்சக்கரவண்டிகளோ உந்துருளிகளோ பயணிக்க முடியாத படி மோசமான நிலையிலுள்ளது.

இடையில் உள்ள சிறிதளவு தூரம் தரவையாக இறுகி கிடக்கின்ற போதிலும் இது மாரி காலததில் நீர் நிறைந்த பகுதியாகி விடும். அப்போது வேறு எந்தப் பாதையாலும் இக்கிராமத்திற்கு செல்ல முடியாது.

128 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமத்தில் பனை வளத்தையும் விவசாயத்தையும் நம்பியே மக்கள் வாழ்கின்றனர். இவ் வீதியின் சீர்கேட்டினால் அவர்களின் உற்பத்திப் பொருட்களையும், நுகர்வுப் பொருட்களையும் எடுத்துச்செல்ல முடியாத நிலையில் உள்ளது. இக்கிராம மக்களின் நலன் கருதி பூநகரி ப.நோ.கூ. சங்கம் பெரும் சிரமத்தின் மத்தியிலும் நுகர்ச்சிக் கிளையின் ஊடாக பொருட்களை சந்தைப்படுத்தி வருகின்றது.

இக்கிராமத்தில் மருத்துவ வசதிகள் இன்மையினால் நோயாளிகளைச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்வதாயின் கௌதாரி முனையில் இருந்து 25கி.மீ தூரத்தில் உள்ள சாமிப்புலம் கிராமத்தின் திலீபன் மருத்துவமனையிற்கோ அல்லது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிற்கோ கொண்டு செல்ல வேண்டும். மேலும் இக்கிராமத்தில் இருந்து நோயாளிகளை உழவு இயந்திரத்தின் மூலம் ஏற்றி வர வேண்டியுள்ளது. எனினும் எந்தவித போக்குவரத்து வசதிகளும் அற்ற நிலையில் நோயாளிகள் மோசமான நிலையை அடையும் நிலையுமேற்படுகின்றது. இந்த நிலையை கவனத்தில் கொண்டு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் சுகாதாரத் திணைக்களத்தின் ஆதரவுடன், அரச அதிபருடன் இணைந்து ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதைவிட கல்வி நிலையினை எடுத்துக்கொண்டால் இக்கிராமத்தில் உள்ள ஆரம்ப பாடசாலையில் தரம் 01முதல் 05 வரையும் மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் 02 ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். கிளிநொச்சி கல்வி வலயத்துக்குள் அடங்கும் இப்பாடசாலையில் தனி ஒரு தற்காலிக கொட்டகை மாத்திரமே காணப்படுகின்றது. எனவே இடநெருக்கடி காரணமாக மர நிழலிலே மாணவர்கள் கல்வி கற்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கற்பித்தல் நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது. மேலும் இப் பாடசாலை நிரந்தரக்கட்டடம் ஒன்று கூரை அற்ற நிலையில் காணப்படுகிறது.



பாடசாலைக்கட்டடம்

இங்கு கடமை புரிகின்ற ஆசிரியர்கள் எவரும் மேற்படி கிராமத்தை நிரந்தரமாகக் கொண்டவர்களல்ல. எல்லோருமே வெவ்வேறு இடங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் ஆனால், ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதியில்லாமலுள்ளதுடன் மலசலகூட வசதிகள் இன்மை எனப் பல குறைகள் அங்கு காணப்படுகின்றன.

இது ஒரு புறமிருக்க இங்கு அடிப்படைக் கல்வி கற்றபின் மேலதிக கல்விக்காக பூநகரி மகாவித்தியாலயத்திற்கே மாணவர்கள் செல்லவேண்டியுள்ளனர். கௌதாரி முனை கிராமத்திற்கும் பூநகரி மகாவித்தியாலயத்திற்கும் இடையேயான தூரம் 16கி.மீ. ஆகும். இங்கு உயர் கல்விக்காக செல்லும் மாணவர்கள் காலை 6.00 மணிக்கு நடந்து செல்ல ஆரம்பித்தால் தான் நேரத்திற்குப் பாடசாலையைச் சென்றடைய முடியும். பாடசாலையை முடித்து வீடு திரும்பும் போது கொடும் வெயிலிலும், சுடு மணலிலும் நடந்துசெல்லவேண்டிய காரணத்தினால் அடிப்படைக் கல்வியைக்கற்று விட்டு 82 மாணவர்கள் வீடுகளில் பாடசாலை செல்லாது நிற்பதனை அவதானிக்க முடிகின்றது. பாடசாலையை அபிவிருத்தி செய்ய எந்த அரச, அரசசார்பற்ற அமைப்புகளும் முன்வரவில்லை என கிராம அபிவிருத்திக்குழு கவலை தெரிவித்துள்ளது.

இங்கு வாழும் மக்கள் பிரதான தொழிலாக நெற்செய்கையையும், கடற்றொழிலையும் மேற்கொண்டு வந்துள்ளனர். இராணுவ நடவடிக்கையினால் 2857 அடி கடல் அணைக்கட்டு சிதைக்கப்பட்டதனால் 250 ஏக்கருக்கு மேல் வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறிச் செல்கின்றன. இதனால் கிராமத்தில் உள்ள குடிநீர்க் கிணறுகளும் உப்பு நீராக மாறி வருகின்ற நிலையில் "எமது கிராம அபிவிருத்தியில் யாரும் உதவமாட்டார்களா" என்பதே இங்குள்ள மக்களின் அங்கலாய்ப்பாகும்.

— கனகபுரச் சோதி —

# சு.க.படையினரை குறைகூறுவதனால் அவர்களின் எதிர்ப்பை சம்பாதித்துள்ளது

## லங்கா சமசமாஜக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி படையினரையும் பொலிசாரையும் அடிக்கடி குறை கூறி வருகின்றது. இதனால் அவர்களின் எதிர்ப்பைச் சுதந்திரக் கட்சி எதிர் நோக்கியிருக்கிறது. இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சி அநுராதபுரம் அமைப்பாளர் ரெஜி பெரேரா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதால் அதன் அழிவு காலம் ஆரம்பமாகி விட்டது. ஜே.வி.பி.சுதந்திரக்கட்சியுடன் எப்படியாவது கூட்டுச் சேர்ந்து நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றது. இது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும்.

அநுரா பண்டாரநாயக்கவைப் பொறுத்த வரை பிரச்சினைகள் அவருக்குக் கிடையாது. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வந்தவர் அடிக்கடி பச்சோந்தி வேடம் போடுபவர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மாத்திரமன்றி இக் கட்சி அங்கம் வகிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணியையும் படுகுழியில் தள்ள ஜே.வி.பி முயன்று வருகிறது.

# ஐக்கிய தேசிய முன்னணி செயற்பாடுகளை மக்களுக்கு விளக்கிக் கூற நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு விளக்கிக் கூற குழுவொன்றை பிரதமர் நியமித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து இரு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார முன்னேற்றம் என்பன தொடர்பாகவே மக்களுக்கு விளக்கிக் கூற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான குழுவில் மகிந்த சமரசிங்க, எஸ்.பி திசாநாயக்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் போன்ற கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.

பிரசாரங்கள் மூலமாகவே இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளன.

# த.பு.கழக மூன்றாவது செயலகம் திருகோணமலையில் திறப்பு

(திருமலை)

திருமலை குச்சவெளிப் பகுதியில் திருமலை மாவட்டத்திற்கான தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மூன்றாவது பிரதேச செயலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாலை 3 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் பெயர்ப்பலகையை திருமலை மாவட்டப் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலகத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திருமலை மாவட்டப் பணிப்பாளர் மாதவராஜா நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெற்றது.

குச்சவெளிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களின் தேவைகளை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கே இந்த பிரதேசச் செயலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டப் பணிப்பாளர் மாதவராஜா தெரிவித்தார். (25)

# வாகன விபத்து; ஒருவர் பலி!

நீர்வேலி-அச்செழுப் பகுதியில் உழவு இயந்திரமொன்று துவிச்சக்கர வண்டியில் வந்தவர்களை மோதியதில் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றையவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அளவெட்டி கணேஸ்வரத்தைச் சேர்ந்த சு.உதயசீலன் (வயது-41) என்பவரே பலியானவராவார். சி.சந்திரகுமார் (வயது-30) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# 'யுனஸ்கோ' நிறைவேற்று சபை உறுப்பினராக கோடித்துவக்கு தேர்வு

(கொழும்பு)

யுனஸ்கோ அமைப்பின் நிறை வேற்று சபை உறுப்பினராக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித் துவக்கு அதிகபடியான வாக்கு களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 140 நாடுகளின் வாக்குகளின் மூலமே இந்த உறுப்பினர் பதவியை கல்வி அமைச்சர் பெற்றுக் கொண்டுள்ளார்.

1945 ஆம் ஆண்டு அங்குரார்ப் பணம்செய்து வைக்கப்பட்ட யுனஸ்கோ அமைப்பில் 191 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

# கொழும்பை அச்சுறுத்தும் புராதன கட்டடங்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் பத்தொன்பது கட்டடங்கள் இடிந்து விழும் அபாயம் எதிர்நோக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இதனைகொழும்பு மாநகர சபையோ அல்லது பொது அமைப்புக்களோ கண்டும் காணாமலும் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கபூர் கட்டடத்தொகுதி மட்டுமன்றி ஐந்து லாம்புச்சந்தியில் அண்மையில் தீ விபத்துக்குள்ளான கட்டடத்தொகுதிகளும் ஒல்கொட் மாவத்தையில் விக்டோரியா பில்டிங் போன்றவையும் தற்போது பாதுகாப்பற்ற கட்டடங்களாக மாறிவருவதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவ்வகை கட்டடங்களில் கொள்ளையர்களும் சட்ட விரோதக் கும்பல்களும் மறைந்து வாழ்வதாகவும் கூறப்படுகிறது.

# சண்டி மல்லி கொலையுடன் பொலிஸ் அதிகாரிக்கு தொடர்பு!

(கொழும்பு)

'தென்மாகாண சபை உறுப்பினரான சண்டிமல்லி என வர்ணிக்கப்படும் ரஞ்சித் என்பவரின் கொலையோடு சிறிலங்காப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாதாளக் குழுவினரோடு இணைந்து அவர்களை வழிநடத்தியும் சட்டத்தின் பிடியிலிருந்து அவர்களை காப்பாற்றவும் இப் பொலிஸ் அதிகாரிக்கு அரசியல்வாதி ஒருவரின் ஆதரவும் கிடைக்கப்படுவதாகத் தெரிகிறது.

அண்மையில் கடவத்தைப் பகுதியில் இடம் பெற்ற வாகனக் கொள்ளை தொடர்பான விசாரணைகளில் இவரது பெயரும் சம்பந்தப்பட்டிருப்பினும் பாதுகாப்புக்கு அஞ்சி ரகசியப் பொலிசார் இத்தகவலை வெளியிட மறுத்துள்ளனர்.

எவ்வாறெனினும் இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்களைக் கொண்டு அடையாள அணிவகுப் பொன்று நடாத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் போதும் மேற்படி சந்தேக நபரின் அச்சுறுத்தலை தாம் எதிர் நோக்கியிருப்பதாக கைது செய்யப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

# பொங்குதமிழில் மாணவர் பங்கேற்றால் அதிபர்கள் மீது வழக்குத் தாக்கல்

## -சட்டமா அதிபருடன் படையினர் ஆராய்வு

**பொங்குதமிழ் நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களைக் கலந்து கொள்ள அனுமதிப்பதற்காக வட-கிழக்கிலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக படையினர் ஆலோசித்து வருகின்றனர்.**

சிறிலங்கா இராணுவத் தளபதியூடாக பாடசாலை அதிபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு வருவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். வட-கிழக்கில் நடைபெறும் பொங்குதமிழ் நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்வது தொடர்பாக இராணுவத்தினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். மாணவர்களது கல்வியைப் பாதிக்கச் செய்து அவர்களை பொங்குதமிழ் நிகழ்வுகளில் புலிகள் ஈடுபடுத்தி வருவதாகவும் படையினர் கூறியுள்ளனர். இது மாணவர்களது அடிப்படை உரிமையைப் பாதிக்கும் ஒரு செயலெனவும் இந் நிகழ்வுகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தற்போது இராணுவ சட்டப் பிரிவினர் சட்டமா அதிபருடன் ஆலோசித்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் மன்னாரில் பொங்குதமிழ் நடைபெறுவதற்கு முன்னர் இது தொடர்பாக முடிவொன்றை எடுப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# கண்காணிப்புக்குழுவிடமே சிஹல உறுமய பாதுகாப்புக் கோர வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

திருகோணமலை குரங்குபஞ்சான் பிரதேசத்திற்கு செல்வதாகக் கூறும் சிஹல உறுமயவினர் தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரே தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமென சிறிலங்கா பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குரங்கு பாஞ்சான் முகாம் சர்சைக்கு முடிவுகட்ட அங்கு செல்லப் போவதாகவும் அதற்கேற்ற பாதுகாப்பு வழங்க வேண்டுமெனக் கோரி சிஹல உறுமய கட்சி பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரிடம்கேட்டபோது

இது போன்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதமெதுவும்பாதுகாப்பு அமைச்சுக்குக் கிடைக்கவில்லை அதேவேளை இவ்வாறான கோரிக்கையை சிஹல உறுமய கட்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வினருக்கே கூறவேண்டும். ஏனெனில் இவ்வாறான விடயத்தை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவே கையாளுகிறதென அவர் மேலும் கூறியுள்ளார்.

# புலிகள் மீதான சர்வதேச அங்கீகாரம் வலுவடைவதாக ராஜதந்திரிகள் தெரிவிப்பு

புலிகள் மீதான சர்வதேச அங்கீகாரம் வலுவடைந்து வருவதாக சர்வதேச ராஜதந்திர வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அயர்லாந்தில் நடைபெற்ற சட்ட ஆலோசனையில் புலிகள் பங்குபற்றியதால் முன்னரைவிட அவர்கள் மீதான சர்வதேச சமூகத்தின் பார்வை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புலிகளின் பிரமுகர்கள் அயர்லாந்து நாடாளுமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அழைத்துச்செல்லப் பட்டமை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென சர்வதேச விமர்சகர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்துறை அமைச்சருக்கு எதிரான தீர்ப்பு ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக பத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐ.நா.வின் சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் இலங்கைக் கிளையிடம் செய்த முறைப்பாடு மீதான தீர்ப்பு வழங்குதல் ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஒருவார காலத்தில் தீர்ப்பு வழங்கவிருந்த இம் முறைப்பாடு மீதான பரிசீலனை மேலும் காலதாமதமாகும் என்பதால் இம் முடிவு எடுக்கப்பட்டது. இதற்கிடையில் ஐ.நா. மனித உரிமைக் குழுவின் வருடாந்த மாநாடு கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் அக்டோபர் 3 ஆம் திகதிவரை வரை ஜெனிவாவில் நடைபெற்றுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசால் தமது கட்சி உறுப்பினர்கள் தாக்கப்படுவதையிட்டும் அச்சுறுத்தல்களுக்குள்ளாவதையிட்டுமே இந்த முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் விளையாட்டுத்துறை கலந்துரையாடல்

(மன்னார்)

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் விளையாட்டுக்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் சகல கிராமசேவகர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நேற்றுக் காலை 10.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் ஆரம்பமான இந் நிகழ்விற்கு மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமை தாங்கினார்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, விளையாட்டுத் துறை இணைப்பாளர் இன்பன், மன்னார் மேலதிக அரச அதிபர் எஸ். நீக்கிலாப்பிள்ளை, மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் மூர்த்தி, மன்னார் உதவி அரச அதிபர் திருமதி மோகனநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

250க்கும் அதிகமானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக அண்மையில் 19 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மன்னார் புனித சவேரியார் தேசிய ஆண்கள் கல்லூரி வீரர்களுக்கு தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா வெற்றிக் கேடயம் மற்றும் பணப் பரிசு வழங்கிக் கௌரவித்தார். (மி)

## பதவி நீக்கம்

மது அருந்திய இரண்டு பொலிசார் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் புத்தளத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்றுள்ளது. இவர்கள் சென்ற வாகனம் ஒன்று வியாபார தலம் ஒன்றில் மோதி அதற்குப் பாரியசேதம் ஏற்பட்டதை அடுத்தே இந் தப் பதவி நீக்கம் இடம்பெற்றது. (32)

# 4 ஆம் ஆண்டு நினைவினில் நனைகின்றோம்



தாயக மண்ணில்
13
□
02
□
1975

தாயக விடுதலைக்காய்
14
□
10
□
1999

மாலதி படையணி மருத்துவப் போராளி

## கப்டன் திலீபனா

சதாசிவம்-சதானந்தி
சிலாவத்தை,முல்லைத்தீவு

தாயக விடுதலைக்காகப் புறப்பட்ட
தமிழீழத் தங்கையே திலீபனா!
தாயின் பாசத்துடன் தயங்காது களம் சென்றாய்.
தாய் மண் விடிவதற்காய்
தயங்காது உயிர் தந்தாய்.
மறப்போமா உன்னையென்றும்.

கடந்த 14-10-1999 ஆம் திகதி அன்று அம்பகாமம் பகுதியில் பெருமெடுப்பில் முன்னேறிய (வோட்டசெட் I) இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் வீரகாவியமான அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்:-குடும்பத்தினர்
அம்மா,தம்பி,ஜேர்மனியில்
இருக்கும் அத்தான் தர்மன்,
அக்கா சுதா, பிள்ளைகள்,
சின்னக்கா, அம்மம்மா.

சிலாவத்தை,
முல்லைத்தீவு.
(சி-7792)

# நான்காண்டு நினைவுநாள்



தாயின் மடியில்
20
□
03
□
1982

மண்ணின் மடியில்
14
□
10
□
1999

## லெப்ரினன்ட் கண்ணாளன்

லோகேந்திரன் –சுஜேந்திரன்(சுஜன்)

தலைவன் காட்டிய பாதையிலே
உன் பிஞ்சுப் பாதங்களைப் பதித்தவனே.
மானத் தமிழன் என்று நெஞ்சமதில்
அழியாத உறுதி கொண்டவனே.
ஆண்டுகள் நான்கு போனாலும்
ஓர் நிமிடம் கூட உனை மறந்ததில்லை
நெஞ்சமதில் நிழலாடும் உன் நினைவுகளை
எம் உயிர் உள்ளவரை மறவோம் ஐயா.

இந்நாளில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

உன் நினைவுடன்
வாழும்,
அப்பா,அம்மா.
தம்பிகள்(சுமணன்,சுதனன்)
உறவுகள்.

செல்வபுரம்,
முல்லைத்தீவு.

(3827)


கிளிநொச்சி நகரப்பகுதிக்கு புதிதாக வழங்கப்படவுள்ள தொலைபேசி இணைப்புக்களிலிருந்து ....

இரணைமடுச்சந்திக்கும்,
பரந்தன் சந்திக்கும் இடையில்
தொலைத் தொடர்பு நிலையங்களை
நடாத்த விரும்புவோர் தமது பதிவுகளை,

வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்,
வைத்தியசாலை முன்பாக,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

எனும் முகவரியில்
மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(3845)



## சிந்தனைக்கு

நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-10-2003

# ஏமாற்றுப் பேச்சுக்கள்

"ஜே.வி.பி.யுடன்இணைந்து புதிய ஆட்சி அமைத்தபின் புலிகளுடன் பேசுவோம்" என முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நெருங்கிய சகாவுமான மங்கள சமரவீர கூறியிருக்கிறார். "என்றாவது ஒருநாள் ஜே.வி.பி.யினரையும் இணைத்துக் கொண்டு நாங்கள் அமைக்கும் புதிய அரசாங்கத்தின் கீழ் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்போம்" என அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பி.–சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டுக் குறித்த பேச்சுக்கள் முறிவடைந்து மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இவ்விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிஇரண்டு அணிகளாகப் பிளவுபட்டிருக்கிறது. இதில் ஜே.வி.பி.யுடன் கூட்டு என்ற அணியில் மங்களசமரவீர முன்னணியில் இருக்கிறார். ஜே.வி.பி.யுடனான கூட்டுக்குறித்த முன்னைய பேச்சுக்களில் முக்கிய பங்காற்றிய அவர் தொடர்ந்து நடைபெறவுள்ள பேச்சுக்களிலும் பங்கேற்கவுள்ளார்.

ஜே.வி.பி.யுடனான கூட்டுக்கு தமது பரம்பரைத் தொகுதியான அத்தனகலவை விட்டுக்கொடுக்கவும் தயாராகவுள்ள அனுராபண்டாரநாயக்கவுக்கு மங்களசமரவீர நெருங்கிய தொடர்புடையவராக இருக்கிறார். ஜே.வி.பி.யுடன் கூட்டு இல்லாவிட்டால் ஐக்கிய தேசிய முன்னணியைத் தோற்கடிக்க முடியாது என்பதில் தீவிர நம்பிக்கைகொண்ட இவர்கள் கூட்டுக்காக எதனையும் செய்யத் தயாராக இருப்பது வெளிப்படை. அண்மையில் அனுரா தெரிவித்த சில கருத்துக்கள், இன்னமும் இரண்டு வருடங்கள் மட்டுமே நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தமக்கையார் சந்திரிகாவைக் கூட கூட்டுக்காகப் பலிகொடுக்கத் தயாராக இருப்பதை வெளிப்படுத்துகிறது.

அதேவேளை, ஜே.வி.பி.யோ கூட்டுக்காக அமைச்சுப் பதவிகள் சிலவற்றை விட்டுக்கொடுக்கத் தயாராக உள்ளது. ஆனால், கூட்டின் தலைமைப் பதவியும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் கைவிடப்படவேண்டும் என்ற தனது கொள்கையும் விட்டுக்கொடுக்கப்பட முடியாதவை எனக் கூறிவருகிறது.

இப்பொழுது ஜே.வி.பி. நடத்தி வரும் பாதயாத்திரைகளின் முக்கிய தொனிப்பொருள், இடைக்கால நிர்வாகசபையும் சமாதான முயற்சிகளும் ஆகும். இவற்றை வெளிப்படையாக எதிர்த்தே அதனது போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இனவாதிகளின் ஆதரவை மூலதனமாகக்கொண்டே சு.க.வுடனான பேரம் பேசலுக்கும் எதிர்வரும் தேர்தலுக்கும் அது தயாராகி வருகின்றது.

இந்நிலையில், சு.க.–ஜே.வி.பி கூட்டு ஏற்படுவதானால் இவ்விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதுதொடர்பாக வாக்குறுதிகள் எவற்றையாவது வழங்கியே தீரவேண்டிய நிலையில் உள்ளது. எனவே, ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் வெற்றிபெற்று அமைக்கப்போகும் அரசாங்கம் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தும் என்று கூறுவது கேலிக்குரிய விடயமாகும்.

ஜே.வி.பி. தனது அடிப்படைக் கொள்கையாக இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலமே தீர்வு எனக் கொண்டிருக்கையில், ஜே.வி.பி.யுடன் இணைந்து அல்லது ஜே.வி.பி.யை நம்பியே ஆட்சி அமைக்க முயலும் சு.க. எப்படி பேச்சுவார்த்தைகளில் இறங்கமுடியும்? சிறிலங்கா சுதந்திரக்கட்சி இதுவரை காலமும் பல கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெற்றபின் அக்கட்சிகளுக்கு வழங்கியவாக்குறுதிகளை மீறியிருக்கிறது. ஆனால், ஜே.வி.பி.இப்பொழுது கொண்டுள்ள பலமானது ஜே.வி.பி.க்கு வழங்கும் வாக்குறுதிகளை மீறிச் செயற்படக்கூடிய சக்தியை சு.க.விற்கு வழங்கப்போவதில்லை. சு.க.விலுள்ள ஒருதரப்பு ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேர விரும்பாமைக்கு ஜே.வி.பி.தமது கட்சிமீது ஆதிக்கம் செலுத்தும் நிலை தோன்றும் என அஞ்சுவதே காரணமாகும்.

எனவே, இன்று சமாதான முயற்சிகளுக்கு உள்ள சர்வதேச ஆதரவு சமாதான முயற்சிகள் முறிவடைந்து யுத்தம் ஆரம்பித்தால் சிறிலங்காவுக்கு ஏற்படக்கூடிய பின்னடைவுகள் குறித்த எச்சரிக்கைகள் என்பனவற்றுக்கு வழங்கப்படும் பதிலே மங்கள சமரவீரவின் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்த கூற்றுக்களாகும்.

இவ்வாறான ஏமாற்றுப்பேச்சுக்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் தந்துவிடப்போவதில்லை. சமாதான முயற்சிகளில் உண்மையிலேயே இவர்களுக்கு நம்பிக்கையிருக்குமானால் இன்றுள்ள தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே சிறந்ததாகும்.

# சு.க–ஜே.வி.பி. கூட்டணி ஏற்பட்டிருந்தால் இன்றைய நாளில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும்

## ஜே.வி.பி. பிரச்சாரச் செயலர் வீரவன்ச

(கொழும்பு)

"ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சி செய்யும் முறையைப்பார்த்தால் புலிகள் நிச்சயமாக நாட்டின் மூன்றிலொரு பங்கைக் கைப்பற்றி விடுவார்கள்" என்று ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில். தேசிய பிரச்சினை நோர்வேயிடமும்,பொருளாதாரம் ஜப்பானிடமும்,கடன்கொடுக்கும் நாடுகள் அமெரிக்காவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஐ.தே.கட்சி நாட்டை நாசப்படுத்தும் திட்டத்தை பொதுமக்களும் புரிந்து கொண்டுள்ளார்கள். சு.கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையில் கூட்டணி ஏற்பட்டிருந்தால் இன்றைய நாளில் சிறிலங்கா அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் நாட்டுக்குத் தேவையான புரட்சிகரமான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கும் போது சிறு தாமதங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

ஜே.வி.பி.,சு.க கூட்டணி உடைந்து விட்டது எனக்கூறுவது தவறாகும். அதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

சனாதிபதி ஊடகப்பேச்சாளர் ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கின்றார். அவரின் கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்ளத்தேவையில்லை.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு கூட்டணிதான் வேண்டுமென்பதில்லை. கூட்டணியில்லாமலும் நாம் அரசைக்கவிழ்க்க ஒன்றிணைந்து செயற்படுவோம்.

அதிகாரப் பகிர்வுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டில் சுதந்திரக்கட்சி இருந்தாலும் அவர்களுக்குத்தெரியும் பிரபாகரன் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று! அநுரா பண்டாரநாயக்க மட்டுமே யதார்த்தத்தை உணர்ந்து கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். அரசியலில் சிறந்ததொரு மாற்றம் நிகழவேண்டும் என்று நினைக்கின்றவரும் அவரேதான்! என்றார்.

# வரவு–செலவுத் திட்டம் தோல்வியடையின் அரசாங்கம் தானாகவே பதவி இழக்கும்

## –சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

(கொழும்பு)

ஆளும் கட்சியைப் பதவி நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக பகிரங்க அறிவித்தல்கள், வாய்ப் பேச்சுக்கள், ஊடகச் செய்திகள் மூலம் தெரியவருகிறது. வரும் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போதும் தோல்வி காணப்படின் அரசு தானாகவே பதவியிழக்கும். இவ்வாறு சிஹல உறுமய கட்சி உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, முன்பு கூறியபடி சனாதிபதிக்கு இன்னும் அதிககாலம் பதவி வகிக்க முடியாது. ரணிலின் நோக்கமும் இந்தச் சமாதானப் பேச்சை இழுத்தடிப்புச் செய்வதே. புலிகளின் நிலையும் அதுவே. அவர்களின் இடைக்கால யோசனைகளும் உத்தியோக பூர்வமாக இன்னும் அரசிடம் வழங்கப்படவில்லை. அவர்கள் பாரிஸ் சென்றது தமது தடையை நீக்குமாறு கேட்கவே. அதுவும் சாதகமாகியிருக்கிறது. இங்கிலாந்து செல்ல முடியாமல் அயல் நாடான அயர்லாந்துக்குச் சென்றுள்ளனர். கண்காணிப்புக் குழுவினருக்கு அவர்கள் குரங்கு பாஞ்சான் முகாமுக்குப் பதிலாக வேறொன்றைக் காட்டியுள்ளனர். அதன் நோக்கமானது தம்மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவதும் கொபிஅனானை கிளிநொச்சிக்கு வரவழைப்பதுமே. இரண்டும் சாத்தியமாகவில்லை.

இதற்கிடையில் ரணிலின் அரசைக் கவிழ்க்க, முஸ்லிம் காங்கிரசையும், ஜே.வி.பி.யையும், தமிழ் அமைப்புகளையும், ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலரையும் கூட்டுச் சேர்க்க சனாதிபதி முயல்கிறார்- அத்துடன் பின்னர் மாகாணசபைத் தேர்தலையும் அதன் பின்னர் பொதுத் தேர்தலையும் நடத்தும் நோக்கமும் அவருக்குள்ளது. 2001 ஆம் ஆண்டு ரணில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவேளை, சந்திரிகா அரசின் வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க முயன்றார். அதனால் அவர் கட்சிப் பூசலுக்குள் சிக்கினார். அதேபோல சந்திரிகாவுக்கும் ஏற்படலாம், எனினும் தமது ஆதரவின்றி ஐ.தே.க.வை வீழ்த்துவதற்கு சந்திரிகாவுக்கு முடியாது என ஜே.வி.பி. எண்ணுகிறது. இதற்கிடையில் ரணிலை பிரதமர் பதவியிலிருந்து அகற்றுவதற்கும் ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அதற்கு அவர்கள் இரு காரணங்களைத் தெரிவிக்கின்றனர்.முதலாவதாக எமது நாடு பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும். மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொள்வர். இரண்டாவது புலிகள் யுத்தத்திற்குச் செல்வர். மேற்கு நாடுகள் உதவும். இதன்மூலம் தெரியவருவதானது, மக்கள் ஆதரவுடன் பதவிக்கு வரும் அரசை நீக்குவது உலகில் இலகுவில் நடைபெறாத ஒன்று. எனினும் பிரபா யுத்தத்திற்கு வந்தால் அப்போது பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் துட்டகைமுனு ஆவர்.

# அரச ஊழியர் சம்பளம் 2500 ரூபாவால் அதிகரிக்கும்!

## – சிரேஷ்ட அதிகாரி தகவல்

அடுத்த ஆண்டுக்கான அரசின் வரவு செலவு திட்ட யோசனைகளில் அரச ஊழியர்களின் சம்பளம் 2000 முதல் 2500 வரையில் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. அத்துடன் புதிய பதவி நியமனங்கள் வழங்கப்படுவதில்லை என்ற அரசின் சுற்றுநிருப அறிவித்தலை மீளப் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுமார் 6 லட்சம் அரச ஊழியர்கள் இதன் மூலம் நன்மை பெறுவதுடன் முன்னைய அரசு வழங்கும் 2200 ரூபா கொடுப்பனவு தொடர்ந்து பெற்றுக் கொள்வர் என அரச சிரேஷ்ட அதிகாரி ஒருவர் திவயின பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை விசேடமாக கருத்திற்கொண்டு இவ்வதிகரிப்பு செய்யப்படுவதாகவும் ஓய்வூதியம் பெறும் அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் விதத்தில் கவனம் எடுக்கப்படும் எனவும் மேற்படி அதிகாரி கூறியுள்ளார்.

# மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களை ஏற்க நடவடிக்கை

வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் பெப்ரவரி மாதமும் மத்திய, மேல் ஊவா சப்ரகமுவ மாகாணங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் மே, யூலை மாதங்களிலும் ஏற்றுக்கொள்ளத் தேர்தல் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றின் ஆயுட்காலம் அடுத்தவருடம் முடிவுக்கு வருவதையடுத்து இவற்றுக்கான தேர்தல் நடைபெறவுள்ளன. இதற்கான படிவங்கள் அச்சிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாணசபைக்கு பெப்ரவரி 8ஆம் திகதியும், மத்திய, ஊவா மாகாணங்களுக்கு ஏப்ரல் 25ம் திகதியும், சப்ரமுவ வடமத்திய மாகாண சபைகளுக்கு மே 5ஆம் திகதியும் மேல் மாகாணசபைக்கு மே 4ம் திகதியும், தென்மாகாண சபைக்கு யூலை 07ம் திகதியும் பதவிக்காலம் முடிவடைகின்றது. இதன் பின்னர் 7 நாட்களுக்குள் வேட்பு மனு கோரப்பட வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு 1990ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு அவசரகால சட்டத்தால் ரத்துச் செய்யப் பட்டிருப்பதால் மீண்டும் வேட்புமனு கோருவதற்கு சட்டதிருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என நீதிபதி யின் உத்தரவுக்கிணங்க மேற்படி மாகாண அமைச்சுக்களுக்கு அறிவித்தல் விடுக்கப் பட்டிருப்பதாகவும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# உலகக் கிண்ணக் கால்பந்துப்போட்டியில் ஜேர்மன் மகளிர் அணி சாம்பியன்

அமெரிக்காவில் நடைபெற்ற மகளிர் உலக கோப்பைக்கான கால் பந்துப் போட்டியில், ஜேர்மனி அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள கார்த்தன் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் உலகின் பல முன்னணி அணிகள் பங்கேற்றன. இந்தப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு பலம் வாய்ந்த ஜேர்மனியும், சுவீடனும் தகுதி பெற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமநிலையில் இருந்தன.

இதனால் வெற்றி தோல்வியின்றி இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்ட இறுதி வேளையில் ஜேர்மனி அணி ஒரு கோல் போட்டு வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

# சிறிலங்காவின் அணித்தலைமை திலகரட்ணவிடம்

அடுத்தமாதம் ஆரம்பமாகும் இங்கிலாந்துடனான டெஸ்ட்கிரிக்கெட் போட்டிக்கு சிறிலங்காவின் ஹசன் திலகரட்ண தொடர்ந்தும் அணித் தலைவராக நீடிப்பார்

ஒருநாள் தொடருக்கு மாவன் அத்தபத்து தலைமை வகிப்பார். நான்கு பேர் கொண்ட தெரிவுக் குழுவுக்கும் சிறிலங்கா அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன் வைட்டுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை எனவும் அதற்காகக் காத்திருப்பதாகவும் விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.



# வடக்கு-கிழக்கு ஆழ்கடற்பரப்பில்

## விமான, கடற்படையின் கண்காணிப்புத் தீவிரம்!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு ஆழ்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை மற்றும் விமானப்படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முதல் மட்டக்களப்பு வரையான கடற்பகுதியிலேயே இந்தக் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா கடற்படையின் கிழக்குப் பிராந்திய தலைமை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதக்கப்பல் ஒன்று வருவதாக வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்த தகவல்களையடுத்தே இந்த 24 மணிநேர கடற் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் இந்தோனேசியத் துறைமுகம் ஒன்றில் பெருமளவு ஆயுதங்களுடன் தரித்து நின்றதாகக் கூறப்படும் ஆயுதக்கப்பல் தொடர்பாக சிறிலங்காப் படைத்தரப்பினர் இந்தோனேசியாவுடன் சினேகிதபூர்வ தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

# கடல்வாழ் உயிர்வள தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கடல்வாழ் உயிர்வளத் தொழில்நுட்ப, உள்நாட்டு நீர் வாழ் உயிர் வளத் தொழில்நுட்பப் பாட ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மடு, வவுனியா வடக்கு, வடமராட்சி கிழக்கு கல்வி வலயங்களில் கல்வி கற்பிக்கும் மேற்குறிப்பிட்ட பாட ஆசிரியர்களுக்கான விசேட சந்திப்பு நாளை காலை 9.00 மணிக்கு தமிழீழக் கல்விக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளதால் மேற்குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# யாழ். குடாநாட்டு விபத்துக்கள் குறித்த விசாரணைஅறிக்கையினை உடன் சமர்ப்பிக்குக

## படைத்தரப்பிற்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் வீதிவிபத்துக்கள் குறித்த விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ படைத்தரப்பிற்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக படையினர் வாகனங்களால் பொதுமக்களை மோதும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. இச்சம்பவங்கள் தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒஸ்ரின் பெர்னாண்டோ இராணுவத் தளபதிக்கு அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் படையினரின் வாகனங்களால் பொதுமக்கள் மீது மோதப்பட்ட ஏழு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இருவர் கொல்லப்பட்டு 10 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

தொடரும் இச்சம்பவங்களின் எதிரொலியாக சிறிலங்காப் படையினருக்கும் பொதுமக்களுக்கு மிடையில் இடம்பெறும் மோதல்களினால் யாழ்.குடாநாட்டில் பதற்றநிலை தோன்றி வருகின்றது.

இதேவேளை,' வடக்கு கிழக்கில் சமீபத்தில் நடந்த இராணுவ வாகனங்கள் தொடர்பான விபத்துத் தொடர்பான ஆராய்வில் இத்தகைய அசம்பா விதங்களைத் தடுப்பதற்கான வழி வகைகளை பிரேரிக்கும் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட இராணுவ உத்தி யோகத்தர்கள் அங்கம் வகிக்கும் இந்தக் குழுவை இராணுவத்தளபதி லயனல் பலகல்ல நியமித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட இந்தக்குழு இந்த விபத்துக்கான காரணங்களை கண்டறிவதற்காக சம்பந்தப்பட்ட வாகன சாரதிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யும். அத்துடன் இத்தகைய விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான சிபார்சுகளையும் முன்மொழியும்.

## சம்பளம் வழங்கல்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான இரண்டு மாத சம்பளம் வரும் 16ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளதாக பொறியியலாளர் சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி றம்மியா மைதிலி களஞ்சியத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# தமிழரசுக்கட்சியைப் புனரமைக்க கட்சிப் பிரமுகர்கள் நடவடிக்கை

தமிழர் விடுதலைக் கூட்டணி பிளவுபடும் நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. கூட்டணித் தலைமையின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்துள்ள தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் மீண்டும் அந்தக் கட்சியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் ஊட்டும் வகையில் 15 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் அலுவலகத்தில் நடந்த இக் கூட்டம் தமிழரசுக் கட்சியின் தலைவர் குணநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் செயல்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர். கூட்டணியின் தன்னிச்சையான செயற்பாடுகளுடன் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை களைய தமிழரசுக் கட்சியை சீரமைக்கப்போவதாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் தொடர்ந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி நேர்மையான வழியில் செயற்படாவிட்டால் தமிழரசுக் கட்சி பிரிந்து சென்று தனியாக செயற் படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புதிய பொலிஸ்மா அதிபராக இந்திரா டி சில்வா?

நான்கு பேரின் பெயர்களை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிபார்சு செய்துள்ள போதும் இந்திரா டி சில்வாவின் பெயரையே அரசியல் நிர்ணய சபைக்கு சனாதிபதி அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் புதிதாக நியமிக்கப்பட்ட 28 ஆவது பொலிஸ்மா அதிபராக இருப்பார்.

இதேவேளை, இளைப்பாறிய பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவுக்கு நேற்று பொலிஸ் தலைமையகத்தில் இரண்டு மரியாதை அணிவகுப்புக்கள் இடம்பெற்றன. (32)

# நிமலராஜன் நினைவாக லண்டனில் விரிவுரை

சுயாதீனச் செய்தியாளர் நிமலராஜன் நினைவாக லண்டன் பொருளியல் கல்லூரியில் எதிர் வரும் 30ஆம் திகதி விரிவுரை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

பி.பி.சி.யின் உலகச் சேவை சிங்கள மொழி ஆசிரியரான பிரியந்தலியனகேயின் தலைமையில் சிறிலங்காவின் கொள்கைக்கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சமன் கெலிகம "யுத்தத்திலும் சமாதானத்திலும் சிறி லங்காவின் பொருளாதாரப் பகிர்வு" எனும் தலைப்பில் விரிவுரையாற்றவுள்ளார்.

# வவுனியாவில் 5000சிறுவர் கல்வியை இடைநிறுத்தினர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 5000 சிறுவர்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லாதுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 5000 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமலுள்ளதோடு மாண வர்கள் இடையில் கல்வியை நிறுத்திக்கொள்ளும் நிலைமையும் இம்மாவட்டத்தில் காணப்படுவதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (21)

# நாட்டில் பல்கலைக் கழகங்கள் இருப்பதைவிட மூடிவிடுவது சிறந்தது

## அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

இந்த நாட்டில் பல்கலைக் கழகங்கள் இருப்பதைவிட அவற்றை மூடிவிடுவதே சிறந்ததெனத் தோன்றுகின்றது. ஏனெனில் அங்குதான் இளைஞர் யுவதிகளை ஒன்று திரட்டி அவர்களை நாட்டைச் சீரழிக்கும் கலகக்காரர்களாக மாற்றியமைக்கும் பயிற்சிக் களம் உள்ளது என மத்திய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்த நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி இறத்தோட்டை கைக்காவளை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா, உக்குவளை கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழாவில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

வருடாந்தம் பல்கலைக் கழகக் கல்விக்கான எண்ணாயிரம் மில்லியன் ரூபாவைச் செலவிட்டு 48000 மாணவர்களுக்கு உயர்கல்வி அளித்து வருகின்றோம். என்றாலும் அதில் நாம் எதிர்பார்க்கும் பயன் கிடைத்துள்ளதா? என்பது கேள்விக்குரியதாகவுள்ளது.

மாணவர் கலவரங்கள் காரணமாகப் பல்கலைக்கழகங்களை ஒரு வருடகாலத்திற்கு மேலும் மூடி வைத்திருக்கும் அவலநிலை உலகிலேயே நமது நாட்டில்தான் உள்ளது.

சிறந்த கல்விமான்களையும், அறிஞர்களையும்,நிபுணர்களையும் உருவாக்கும் உயர்கல்வி நிலையங்களுக்கு அடுத்தடுத்து இது போன்ற நிலை ஏற்பட்டு வருவது நாட்டிற்கு எந்தவகையிலும் நன்மை தரப் போவதில்லை.

வருடாந்தம் சுமார் 30 ஆயிரம் பட்டதாரிகள் படித்து வெளியேறுகின்றார்கள். இப்போது அவர்கள் அரசு தொழில் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றார்கள்.

தொழில் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்தல், அரசியல்வாதிகளின் பின் செல்லுதல் போன்ற நிலைமைகள் மாறவேண்டும்.

ஒரு சிறு குழுவினரின் சுயநலத் தேவைக்காகத்தான் இன்று மாணவர் ஆர்ப்பாட்டங்களும், தொழிலாளர் ஆர்ப்பாட்டங்களும்,அரச விரோத செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன என்றார்.

## மீண்டும் ஆரம்பம்

கிண்ணியா ஆலங்கேணியில் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் நேற்றுமுதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன.

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலையடுத்து மூடப்பட்டிருந்த பாடசாலைகளே மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தத்தம் இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

தமிழ்- முஸ்லிம் மக்கள் வேறு நபர்களின் தலைமையின்றி தாங்களே பேசி பிணக்கைத் தீர்த்துக் கொள்வதென்ற தீர்மானத்திற்கிணங்க பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. (25)

## ராணுவப்...

பத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதா கக்கூறி இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புப் பகுதியில் இரவுபகலாக நடமாடுவதாகவும் இது குறித்து அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேரில் சென்று நேற்று புகார் செய்துள்ளனர். அத்தோடு தமது அச்சம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு மற்றும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை ஆகியவற்றிற்கு மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர். (27)

## புலிகள்...

யிருந்த நிலையில் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சர்வதேச நாடுகள் நிர்ப்பந்தித்தாலேயே இடைக்கால நிர்வாகம் குறித்த தமது இறுதி வரைவை விடுதலைப் புலிகள் அயர்லாந்தில் ஆராய்ந்துள்ளனர்.

சிறிலங்கா அரசு சர்வதேச நாடுகளுடன் பாதுகாப்பு இணைப்பொன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால வரைவு குறித்த தமது மாற்று யோசனைகளை விடுதலைப்புலிகள் கையளித்த பின்னர் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய சூழலை தமது அரசு ஏற்படுத்தும் எனவும் தனது உரையில் தெரிவித்துள்ளார். இம் மாநாட்டில் பல சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (32)

## இந்திய...

தருவதாக இந்தியா அறிவித்திருந்தது. இதில் முதலத் தவணையாக 45மி. அமெரிக்க டொலர்கள் ஏற்கனவே சிறிலங்காவிற்கு வழங்கப்பட்டுவிட்டது. இரண்டாவது தடவையாக 30மி. அமெரிக்க டொலர்களை இந்தியா வழங்குவதற்கு வகை செய்யும் ஒப்பந்தத்தில் சிங்கா கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது சிங்கா, சனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் மற்றும் மூத்த அமைச்சர்கள் சிலரையும் சந்தித்துப் பேச இருப்பதாக இந்தியத்தரப்பில் கூறப்படுகிறது.

இலங்கை சமாதான நடவடிக்கைகள், விடுதலைப் புலிகள் தரப்பால் வழங்கப்பட இருக்கும் இடைக்கால நிர்வாகம் குறித்த மாற்றுத்திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் சிங்கா இலங்கைத் தலைவர்களுடன் பேசக்கூடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக்குழுவின் தமிழக அரசுப் பிரதிநிதி ஒருவரும் இடம்பெற்றிருப்பதால் இந்தியாவிற்கும் இடையிலான கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பான சர்ச்சை பற்றியும் இலங்கைச் சிறையிலிருக்கும் தமிழக மீனவர்களை விடுவிப்பது பற்றியும் பேசப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இன்னும் ஒரு வாரத்தில் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்குச் செல்லவுள்ளார். அவருடைய இந்திய விஜயத்தின் போது கூட்டு வர்த்தகம் குறித்த முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன என்பது தெரிந்ததே. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.